# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 25 /பேரூ/2026**
**நாள் : 13.05.2026**

R.D.S. தனசேகரன்,
திருப்போரூர்,
செங்கல்பட்டு மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி,
செங்கல்பட்டு மாவட்டம். - எதிர் மனுதாரர்

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர், பாலாஜி நகர் அருகில், எண். 25, சிதம்பர சுவாமிகள் 1வது தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. RDS. தனசேகரன் என்பவரது 23.12.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 26.12.2025 அன்று பெறப்பட்டு, 25/பேரூ/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>ஆணை</u>**

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர், பாலாஜி நகர் அருகில், எண். 25, சிதம்பர சுவாமிகள் 1வது தெரு என்ற முகவரியில் வசிக்கும் மனுதாரர் திரு. RDS. தனசேகரன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 23.12.2025 நாளிட்ட புகார் மனுவுடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ள 03.12.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

“செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், திருப்போரூர் கிராமம் சர்வே எண். 95ல் விஸ்தீரணம் 17.23 ஏக்கர் நிலம் வருவாய் துறையின் 1877ஆம் ஆண்டின் ‘ அ ‘ பதிவேட்டில் ‘G’ எனவும், நில வகைப்பாடு புஞ்சை புறம்போக்கு எனவும் நிலம் விளைச்சல் தோப்பு புறம்போக்கு நிலம் எனவும் உள்ளது. இந்த நிலம் அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலம் என வருவாய் துறை ‘அ ‘ பதிவேட்டில் பதியப்பட்ட நகல், உதவி ஆணையர், ஆவண காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி அலுவலகம், எழும்பூர் , சென்னை-8 அவர்களால் சான்றொப்பம் செய்து வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அரசு புஞ்சை புறம்போக்கு நிலம் தோப்பு புறம்போக்கு நிலங்கள் உள்ளாட்சிக்கு (Local Body) சொந்தமானது என சென்னை, நில நிர்வாகம் ஆணையரின் ந.க. எண். CLA SO Letter No. 61823/1992/Ciricular, 24.11.1992 நாளிட்ட கடிதத்தில் உள்ளது.

இதனைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாகம் பேரூராட்சி இயக்குநர் அவர்கள் கடிதத்தில் அரசு தோப்பு புறம்போக்கு நிலங்களை கையகப்படுத்தி பேரூராட்சி வசம் ஒப்படைக்கவும் பராமரிப்பு செய்யவும் நடவடிக்கை எடுக்க அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்களுக்கு கடந்த 20.02.2008 நாளிட்ட கடித ந.க. எண். 3064/2008/இ1ல் பேரூராட்சிகளின் இயக்குநர், பேரூராட்சிகள் இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்கள் தெரிவித்துள்ளார். ஆனால் பேரூராட்சியில் நிர்வாகம் தொடர் நடவடிக்கை எடுக்க மறந்து விட்டது. உள்ளாட்சியில் அரசு ஊதியம் பெறும் பேரூராட்சிகள் இயக்குநர், பேரூராட்சிகள் உதவி இயக்குநர்கள், செயல் அலுவலர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் ஆகியோர் நடவடிக்கை எடுக்க தவறி விட்டார்கள்.

மேலும் இதனைத் தொடர்ந்து திருப்போரூர் சிறப்பு நிலை பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண். 13 நாள் 18.03.2022ல் வருவாய் துறையின் 1877ஆம் ஆண்டின் ‘அ ‘ பதிவேட்டின்படி நிலவகை மாற்றம் செய்ய செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் 2022லிருந்து 11/2025 வரை 3 ஆண்டுகள் 5 மாதம் முடிந்துள்ளது. இதுவரை பேரூராட்சி செயல் அலுவலர் ஏன் நடவடிக்கை எடுக்க தயங்குவது ஏன் அப்படி தயக்கம் இருந்தாலும் உரிய ஆவணங்கள் இல்லையென செயல் அலுவலர் நினைத்தால் தலைவர் தீர்மானம் கொண்டு வரும்போது செயல் அலுவலர் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைவிடுத்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூராட்சி மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கொண்டு வரும் தீர்மானத்தின் மீது நடவடிக்கை எடுக்காத செயல் அலுவலர்களின் மீது பேரூராட்சி நிர்வாகம் தேர்தல் ஆணையம் மூலம் செயல் அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இந்த நிகழ்வு தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூராட்சி மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்களை மற்றும் பொதுமக்களை அவமதிப்பு செயலாகும்.

மேலும் இதே பேரூராட்சியில் பணிபுரிந்த முன்னாள் செயல் அலுவலர் திரு. அ. சதீஷ்குமார் என்பவர் மட்டுமே நடவடிக்கை எடுத்துள்ளார் மற்றும் 2022ல் திருப்போரூர் கிராமம் சர்வே எண். 95 குறித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அதற்கு திருப்போரூர் சிறப்புநிலை பேருராட்சி செயல் அலுவலர் பெயர் Respondentஆக சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் 2022ஆம் ஆண்டின் திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் சென்னை உயர் நீதிமன்ற Counter Affidavitல் திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி, திருப்போரூர் வட்டம், திருப்போரூர் கிராமம் சர்வே எண். 95 பேரூராட்சிக்கு சொந்தம் என Counter Affidavit file செய்து சென்னை உயர்நீதிமன்றத்தில் நெம்பர் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு ஏற்கனவே இருந்த செயல் அலுவலர்களுக்கு ஏதும் தெரியவில்லை என்றும் தற்போதுள்ள செயல் அலுவலருக்கு மட்டுமே எல்லாம் தெரியும் என்று நினைப்பது தவறான ஒன்றாகும். அப்படியானால் நீதிமன்றத்தில் வழக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போதைய செயல் அலுவலர் என்ன நிலையில் உள்ளார் என்பது தெரியவில்லை. நாங்கள் நினைப்பது இரண்டு செயல் அலுவலர்கள் நடவடிக்கை எடுத்துள்ளது இவர் தொடர் நடவடிக்கை எடுக்க தயங்குவது ஏதோ உள்நோக்கம் இருக்கும் என்ற சந்தேகம் எழுகிறது. மேலும் திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி மன்றத் தலைவர் தீர்மானம் மீது நடவடிக்கை எடுத்து மாவட்ட அமைச்சர் மூலம்

நகராட்சி நிர்வாக அமைச்சர் மூலமாக மனு சமர்ப்பிக்கப்பட்டது. இந்த மனு மீது பேரூராட்சி இயக்குநர் அவர்கள் நடவடிக்கை எடுத்து செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு பேரூராட்சி இயக்குநர் அவர்கள் கடிதம் ந.க.எண். 13712/2022 நாள் 03.09.2022ல் எழுதி திருப்போரூர் பேரூராட்சி மீது அக்கறையுடன் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். ஆனால் திருப்போரூர் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் பேரூராட்சிக்கு சொத்து வர வேண்டும் என்ற எண்ணம் துளி கூட இல்லை என்பது மேற்காணும் விவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக திருப்போரூர் பேரூராட்சி மன்றத் தலைவர் அவர்கள், செயல் அலுவலர் அவர்கள் நடவடிக்கை எடுக்க தயங்குவதால் மீண்டும் திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தீர்மானம் எண். 609 நாள் 23.05.2025 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 6 மாதம் 7 நாட்கள் ஆகியும் இதுவரை பேரூராட்சி செயல் அலுவலர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பேரூராட்சிக்கு நன்மை செய்யவே பேரூராட்சி பொதுமக்கள் தேர்தல் ஆணையம் அரசு அதிகாரிகள் மனித உழைப்பு கொண்டு தமிழ்நாடு அரசு செலவு செய்து பொதுமக்களுக்கு நன்மை செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூராட்சி மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனுப்பி வைக்கின்றனர். ஆனால் பேரூராட்சி தற்போதைய செயல் அலுவலர் பேரூராட்சி மன்றத் தீர்மானம் மீது நடவடிக்கை எடுக்காதது அனைவரையும் அவமானம் செய்வது போல் நடந்துகொள்ள காரணம் பேரூராட்சி இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரிந்துள்ளது மற்றும் தலைமை செயலகம் செல்வாக்கு ஆகியவை இவரின் அடாவடித்தனம் என்று கூறலாம். எனவேதான் தற்போது திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மீது எனக்கு தனிப்பட்ட எந்த விரோதமும் இல்லை. பேரூராட்சியில் மாதம் ரூ.1,20,000/- சம்பளம் வாங்கி கொண்டு பேரூராட்சி மன்றத் தீர்மானத்தை மதிக்காமல் இருப்பது மிகவும் வருந்துகிறேன். இரண்டு முறை பேரூராட்சி மன்றத் தலைவர் தீர்மானம் கொண்டு வரும்போது செயல் அலுவலர் அவர்கள் ஏன் அதை ஏற்கிறார் என்பது தெரியவில்லை. இந்த நிகழ்வு பொதுமக்களை ஏமாற்றும் செயலாகவுள்ளது.

எனவே இந்து சமய அறநிலையத் துறை தவறுதலாக பட்டா வழங்கப்பட்டதை வைத்து இந்து சமய அறநிலையத் துறையின் கிடைத்த நிலத்தை காப்பாற்ற உணர்வுடன் அதிகாரிகள் போராடி வருகிறார்கள். பட்டா ஒன்றை வைத்து உரிமை கோர முடியாது என உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. அதைகூட ஏற்காமல் தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் 1877ஆம் ஆண்டு வருவாய் துறை 'அ ' பதிவேட்டில் தோப்பு புறம்போக்கு நிலம் என உள்ளது. இந்த நிலம் நில நிர்வாக ஆணையர் அவர்கள் தோப்பு புறம்போக்கு நிலம் உள்ளாட்சிக்கு சொந்தம் எனவும், பேரூராட்சி இயக்குநர் தோப்பு புறம்போக்கு நிலம் அரசு நிலம் என தெரிவித்தும் பராமரிப்பு செய்யவும் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி இரண்டுமுறை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி முடிவெடுக்க வேண்டியது செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் திருப்போருர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தீர்மானத்தை மாவட்ட நிர்வாகத்திற்கு கருத்துரு அனுப்பிடவும் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க முன் வரவேண்டும் என பொது நலன் கருதி தமிழ்நாடு அரசு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள் இந்த நிலம் குறித்து விசாரணை நடத்தி நல்ல தீர்ப்பு வழங்க கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 05.02.2026 நாளிட்ட அறிவிப்பின் மூலம் திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் செயல் அலுவலரிடமிருந்து எவ்வித அறிக்கையும் பெறப்படவில்லை.

3. எனினும். மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு இம்முறைமன்றத்தில் 07.04.2026 அன்று நடைபெறவிருக்கும் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் மற்றும் விரிவான அறிக்கையுடன் ஆஜராகுமாறு 25.03.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரர் திரு. R.D.S. தனசேகரன் என்பவரின் நாளிடப்படாத கடிதம் இம்முறைமன்ற நடுவத்தில் 02.04.2026 அன்று பெறப்பட்டுள்ளது. அதில் தான் ஊரில் இல்லாத காரணத்தினால் 07.04.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு வர இயலாது எனவும், மேலும் தனது புகார் மனுவை திரும்பப் பெறுவதாகவும் கீழ்க்கண்டவாறு தெரிவித்து மனுதாரர் திரு. R.D.S. தனசேகரன் என்பவர் 07.04.2026 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

“25, சிதம்பர சுவாமிகள் 1வது தெரு, பாலாஜி நகர், திருப்போரூர் என்ற விலாசத்தில் வசிக்கும் R.D.S. தனசேகரன் ஆகிய நான் 23.12.2025 அன்று செயல் அலுவலர், திருப்போரூர் சிறப்பு நிலை பேரூராட்சி அவர்கள் மீது குற்றச்சாட்டு மனு ஒன்றை தாக்கல் செய்து இருந்தேன். அது தற்போது 07.04.2026 அன்று பிற்பகல் 12.15 மணி அளவில் விசாரணை நடைபெற உள்ளது என்று எனக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நாளில் நான் ஊரில் இல்லாததால் இந்த விசாரணையில் கலந்துகொள்ள முடியாது என்று நான் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டும் இல்லாமல் இந்த புகார் மனுவை நான் திரும்ப பெற்று கொள்கிறேன் என்று நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு காரணம் அதாவது இப்பொழுது குடியிருக்கும் இடம் புல எண். 95ல் திருப்போரூர் பேரூராட்சிக்கு சொந்தமான தோப்பு புறம்போக்கு கீழ் உள்ளது என்று பேரூராட்சியில் பணிபுரியும் திரு. S. முரளி என்பவர் கூறி அவர் தூண்டுதல் காரணமாக மற்றும் அவரே இந்த மனுவை (குற்றச்சாட்டு மனுவை) தயார் செய்து கடிதம் அனுப்பப்பட்டது. என்னிடம் கையொப்பம் பெறப்பட்டது. (பொதுநலன் கருதி நான் இந்த கையொப்பம் இட்டேன்) மேலும் இந்த இடம் சம்பந்தமாக செயல் அலுவலர் எந்த நடவடிக்கையும் எடுக்க முன்வரவில்லை என்று கூறி அவரை இடம் மாற்றம் செய்தால்தான் உயர்நீதிமன்றத்தில் உள்ள வழக்கு W.P. No. 3123 of 2023க்கு நன்றாக இருக்கும் என்று இந்த குற்றச்சாட்டு மனு அவரால் அனுப்பப்பட்டது. திரு. S. முரளி அவர்கள் பொதுநலன் கருதாமல் தன் சுயநலத்திற்காக என்னை பயன்படுத்திக் கொண்டார் என்று தற்போது தெரிய வந்தது.

திரு. S. முரளி செய்யும் தவறான செயலுக்கு செயல் அலுவலர் இடையூறாக இருப்பதால் செயல் அலுவலரை மாற்ற முயற்சித்தார் என்பதை நான் அறிந்து கொண்ட பிறகு குற்றச்சாட்டு மனுவை திரும்ப பெறும் முடிவை எடுத்தேன்.

இந்த குற்றச்சாட்டு மனு திரு. S. முரளி அவர்களின் தூண்டுதல் பேரில் அனுப்பப்பட்டது என்று இந்த கடிதம் மூலம் நான் மிக தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

5. இதற்கிடையில் திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 30.03.2026 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 425/2025ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு தனது விளக்கத்தினை அளித்துள்ளார். அதில் –

“செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட திருப்போரூர் கிராம புல எண். 95ன் விஸ்தீரணம் 17.23 ஏக்கர் நிலம் 1877ஆம் ஆண்டு தோப்பு புறம்போக்கு எனவும், இந்த நிலத்தை இந்து சமய அறநிலையத் துறை பெயரில் தவறுதலாக பட்டா வழங்கியுள்ளது என தெரிவித்தும், அந்த நிலத்தினை மீட்க தற்போதைய செயல் அலுவலர் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் திரு. RDS. தனசேகரன் என்பவரின் முறையீட்டு மனு நாள் 23.12.2025ல் புகார் தெரிவித்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அப்புகார் தொடர்பாக செயல் அலுவலரின் வாதத்தை எழுத்துபூர்வ அறிக்கையுடன் தொடர்புடைய ஆவணங்களின் நகல்களையும் சேர்த்து தாக்கல் செய்யுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ கடித எண். 25/பேரூ./2026-2 நாள் 05.02.2026ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி புகார் மனு மீது நடவடிக்கை எடுக்கும்பொருட்டு திருப்போரூர் கிராம புல எண் 95ல் உள்ள 17.23 ஏக்கர் நிலம் திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி திருக்கோவிலுக்கு சொந்தமானது என்பதால், அதன் உரிமையாளர் குறித்த ஆவணங்களின் நகல்கள் மற்றும் குறிப்புரையினை அனுப்பி வைக்கும்படி பேரூராட்சி அலுவலக 18.02.2026 நாளிட்ட கடித ந.க.எண். 425/2025ல் திருக்கோவில் செயல் அலுவலரிடம் கோரப்பட்டது. அருள்மிகு கந்தசுவாமி திருக்கோவில் செயல் அலுவலரின் 09.03.2026 நாளிட்ட கடிதத்தில் திருக்கோவில் செயல் அலுவலரால் பின்வரும் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி திருக்கோயிலுக்கு சொந்தமான நிலம் திருப்போரூர் கிராமம், பட்டா எண். 1, இதில் புல எண். 95ல் மொத்த பரப்பு 17.23 ஏக்கர், இதில் சுமார் 3. ஏக்கர் பரப்பில் உள்ள குடியிருப்பாக பயன்படுத்தி வரும் இடத்தினை அளவீடுகள் செய்யப்பட்டு, 84 நபர்கள் ஆக்கிரமிப்பினை கண்டறியப்பட்டு மேற்படி நபர்கள் மீது இணை ஆணையர் நீதிமன்றத்தில் இந்து சமய அறநிலையத் துறை சட்டப்பிரிவு 78ன் கீழ் வழக்கு விசாரணை நடைபெற்று திருக்கோயில் சொத்துக்கள் என உறுதிபடுத்தப்பட்டு ஆக்கிரமிப்புதாரர்கள் வெளியேற்றிட உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட ஆக்கிரமிப்புதாரர்களும் மேற்படி நிலங்கள் திருக்கோவிலுக்கு சொந்தமானது என்பதை ஒப்புக்கொண்டு தங்களை வாடகைதாரராக வரன்முறைபடுத்திட வேண்டி திருக்கோவில் நிர்வாகத்திற்கு மனு செய்து கோரிக்கை வைத்துள்ளனர். இது குறித்து ஆணையருக்கு மேல் முறையீடு செய்து மேற்கண்ட நபர்களை வாடகைதாரராக வரன்முறைபடுத்திட தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், மேற்படி புகார் மனுதாரர் திரு. RDS. தனசேகரன் அவர்களும் மேற்படி சொத்து திருக்கோவிலுக்கு சொந்தமானதுதான் என்பதை ஒப்புக்கொண்டு திருக்கோவில் நிர்வாகத்திற்கு கடிதம் அளித்துள்ளார். திருப்போரூர் கிராம புல எண் 95ல் உள்ள நிலங்கள் அனைத்தும் திருப்போரூர் கிராம பட்டா எண். 1ல் கணினி சிட்டாவில் அருள்மிகு கந்தசாமி திருக்கோவில் என பதிவில் உள்ளது.

1. திருப்போரூர் கிராம புல எண். 95ல் உள்ள நிலங்கள் அனைத்தும் 1877ல் உள்ள OSRல் திருக்கோவில் பெயரில் தாக்கலாகி உள்ளது. மற்றும் 1911ல் ரீசெட்டில்மெண்ட்

ஆவணத்திலும் திருக்கோவில் பெயரிலேயே உள்ளது. மேலும் UDR மற்றும் கணினி சிட்டாவிலும் திருக்கோவில் பெயரில் உள்ளது.

2. திருப்போரூர் கிராம புல எண். 95ல் உள்ள நிலங்கள் குறித்து திருக்கோவில் சொத்து பதிவேட்டில் திருக்கோவிலுக்கு சொந்தமானது எனப் பதிவுகள் உள்ளது. மேலும் நிலவரி திருக்கோவில் மூலமே செலுத்தப்பட்டு வருகிறது.

மேற்படி புல எண். 95க்கு உண்டான வருவாய்த் துறை ஆவணங்கள் அனைத்தும் திருக்கோவில் பெயரிலேயே பதிவு செய்யப்பட்டு உள்ளது. தொடர்ந்து அடங்கலிலும் திருக்கோவில் பெயரிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் நிலவரியானது திருக்கோவில் மூலமே செலுத்தப்பட்டு வருகிறது. மேலும், திருப்போரூர் கிராம புல எண். 95, மொத்த பரப்பு 17.23 ஏக்கர் நிலம் முழுவதும் அருள்மிகு கந்தசாமி திருக்கோவிலுக்கு சொந்தமானது. மேற்படி சொத்து குறித்து உரிமை கோர பேரூராட்சி நிர்வாகத்திற்கு எவ்வித உரிமை மூல ஆவணமும் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. அதற்கான ஆவணங்கள் இணைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட திருப்போரூர் கிராம புல எண். 95ன் விஸ்தீரணம் 17.23 ஏக்கர் நிலம் குறித்து பின்வரும் விவரங்கள் பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

திருப்போரூர் ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள் நகர் குடியிருப்போர் நலவாழ்வு சங்கம் மனு நாள் 08.03.2021ல் திருப்போரூர் கிராமம் புல எண். 95ல் 17.23 ஏக்கர் தோப்பு புறம்போக்கு நிலம் ஆனது 1987ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையத் துறையின் பெயரில் பதிவேற்றம் செய்யப்பட்டதை ரத்து செய்தும், 3 ஏக்கர் பரப்பில் வசித்து வரும் 200 குடும்பங்களுக்கு பட்டா வழங்கிடவும், மீதமுள்ள 14.23 ஏக்கர் நிலத்தினை தோப்பு புறம்போக்கு என திருப்போரூர் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது வட்டார வளர்ச்சி அலுவலர் பெயரில் வகை மாற்றம் செய்திடவும் கோரி பேரூராட்சி செயல் அலுவலருக்கு மனு செய்யப்பட்டது.

அதனடிப்படையில், 14.23 ஏக்கர் நிலத்தினை அளவீடு செய்து பேரூராட்சி பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்து தரும்படி செயல் அலுவலரின் கடிதம் ந.க. எண். 134/2021, நாள் 21.06.2021ல் வட்டாட்சியரை கோரப்பட்டுள்ளது.

தொடர்ந்து, 2022ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூராட்சி மன்றத்தால் தீர்மானம் எண். 10/18.03.2022ல் மேற்படி இடத்தினை தவறுதலாக இந்து சமய அறநிலையத் துறைக்கு 'அ' பதிவேட்டில் பதிவு செய்துள்ளதை திருத்தம் செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதனடிப்படையில், புல எண். 95ஐ நிலவகை மாற்றம் செய்திட மன்றத் தலைவரால் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களுக்கும் கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

மேற்கூறிய கடிதங்களின் மீது தொடர் நடவடிக்கை ஏதும் இல்லாத நிலையில், திருமதி. மு. புஷ்பலதா, க/பெ. முரளி மற்றும் 6 நபர்கள் மேற்படி நிலத்தினை வகை மாற்றம் செய்திட உத்திரவு வழங்கும்படி கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No. 3123/2023ல் வழக்கு தொடர்ந்தனர். அவ்வழக்கிற்கு செயல் அலுவலரால் எதிர் உறுதி ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய வழக்கானது 04.03.2026 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பின்வருமாறு உத்திரவிடப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

This writ petition has been filed to direct the respondents 5 and 6 to hold an enquiry in respect of ownership of the subject land in S.No.95 and consequently, transfer the revenue records relating to the said land to the name of the Town Panchayat Thirupporur in terms of the G..O. No. 318 (Revenue and Disaster Management Department) dated 30.08.2019.

2. Today, the learned Government Advocate appearing for the respondents would submit that after filing this petition, a civil suit was filed by 18 persons, including some of the petitioners herein, due to which, the prayer in this writ petition has become infructuous. Hence, he requests this Court to dismiss the present petition.

3. Therefore, by recording the above submissions, this writ petition is dismissed as infrctuous. No costs.

மேலே நீதிமன்ற உத்திரவில் தெரிவித்துள்ள வழக்குகள் செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது.

இதனிடையில், மீண்டும் மேற்படி நிலத்தினை பேரூராட்சி பெயருக்கு வகை மாற்றம் செய்திட பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண் 609/23.05.2025ல் தீர்மானம் இயற்றப்பட்டது.

அதனடிப்படையில் தற்போதைய செயல் அலுவலரான நான் இக்கோப்பில் உள்ள ஆவணங்களை ஆய்வு செய்ததில், திருப்போரூர் கிராம புல எண். 95 என்பது தோப்பு புறம்போக்கு என்பதற்கோ அவ்விடமானது பேரூராட்சியின் பராமரிப்பின் கீழ் உள்ளது என்பதற்கோ எந்தவிதமான ஆவணங்கள் பேரூராட்சி வசம் இல்லை என கண்டறிந்ததைத் தொடர்ந்து, மேற்கூறிய நிலத்தின் மீது உரிமை கோர நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

மேலும் அந்நிலத்தில் குடியிருப்பாக பயன்படுத்தி வரும் இடத்தில் பேரூராட்சியில் பணிபுரியும் பணியாளர்கள் சிலரும் வீடு கட்டி குடியிருந்து வந்த நிலையில், கோவில் நிர்வாகம் மூலம் ஆக்கிரமிப்புதாரர்களை வெளியேற்றிட வழக்கு தொடரப்பட்டதால், திருக்கோவிலுக்கு சொந்தமான அந்நிலத்தில் தங்கள் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்திட இயலாது என்ற நிலை ஏற்பட்டவுடன், பேரூராட்சியில் பணிபுரிந்து வந்ததை சாதகமாகப் பயன்படுத்தி, செயல் அலுவலருக்கு தவறான தகவல்களை தெரிவித்து, மேற்கூறியவாறு கடிதம் அனுப்ப செய்து அதனை ஆதாரமாகப் பயன்படுத்தி அந்நிலத்தின் மீது உரிமை கோர முயன்றுள்ளதாக அறிய வருகிறது. மேலும் அந்நிலத்தில் குடியிருந்தவர்களையும் கோவில் நிர்வாக நடவடிக்கைக்கு கட்டுப்படுவதை தடுத்து, பேரூராட்சி மற்றும் கோவில் நிர்வாகத்திற்கு எதிராக வழக்கு பதிவு செய்தும் அரசுப் பணியாளர் என்ற பதவியினை தவறாக பயன்படுத்தியுள்ளார். 17.23 ஏக்கரில் 14.23 ஏக்கரை மட்டும் பேரூராட்சி பெயருக்கு வகைமாற்றம் செய்யக் கோரியுள்ளதே இதற்கான சான்றாகும். தற்போது அப்பணியாளரும், கோவில் நிலத்தில் வாடகைதாரராக வாடகை செலுத்த ஒப்புக்கொண்டு சம்மத கடிதம் அவர் தம் மனைவி பெயரில் அளித்துள்ளார்.

மேற்கூறிய பணியாளர் திரு. ச. முரளி என்பவர் 1994ஆம் ஆண்டு முதல் திருப்போரூர் பேரூராட்சியில், குடிநீர் திட்டம் தினக்கூலிப் பணியாளராகவும், தொகுப்பூதியத்திலும்

பணியமர்த்தப்பட்டு, தற்போது அரசு நிலையாக்கப்படாத அடிப்படை பணியிடமான குடிநீர் திட்ட உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார். சுமார் 30 வருடங்களுக்கும் மேலாக ஒரே இடத்தில் பணிபுரிந்து வருகிறார். இவரது நடவடிக்கைகளால் உயர் அலுவலர்களிடமும் பொதுமக்களிடமும் அரசு ஊழியர் என்ற பணிவின்றி நடந்து கொண்டு வருகிறார். மேலும் தற்போது 18 நபர்களால் தொடரப்பட்டுள்ள வழக்குகளுக்குத் தேவையான ஆவணங்கள், அப்பணியாளரால் கோப்புகளிலிருந்து நகலெடுத்து வழங்கப்பட்டுள்ளது.

மேற்கூறியவாறு கோவில் நிலத்தை அபகரிக்க உடன்படாததால் என் மீது பல்வேறு புகார்களை தெரிவித்து புகார் மனுதாரரை தூண்டிவிட்டு, இவ்வழக்கினையும் தொடர செய்துள்ளார் என்ற விவரம் பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே, செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட திருப்போரூர் கிராம புல எண். 95ன் மொத்தப் பரப்பு 17.23 ஏக்கர் நிலம் பேரூராட்சிக்கு சொந்தமில்லாத நிலையில், அதில் குடியிருந்து வருபவர்கள் திருக்கோவில் நடவடிக்கைக்கு கட்டுப்பட கடமைப்பட்டவர்கள் என்பதை உணராமலும், அரசு ஊழியராக இருந்தும் இருவேறு அரசு துறைகளை தன் சுயலாபத்திற்காக நீதிமன்ற வழக்கு, புகார்மனு என அலைக்கழிப்பதுடன் தான் பணிபுரிந்து வரும் பேரூராட்சி நிர்வாகத்திற்கும் உண்மையாக இல்லாமல் செயல் அலுவலர் மீது புகார் தெரிவிக்கத் தூண்டியுள்ள இப்பணியாளர் இதே பேரூராட்சியில் பணியில் நீடிக்கும் நிலை ஏற்படின் பல்வேறு நிர்வாகச் சிக்கல்களை ஏற்படுத்துவார் என தெரிவிப்பதுடன், செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட திருப்போரூர் கிராம புல எண். 95ன் மொத்தப் பரப்பு 17.23 ஏக்கர் நிலம் பேரூராட்சிக்கு சொந்தமில்லாத நிலையில் காழ்ப்புணர்ச்சியினால் என் மீது தெரிவிக்கப்பட்ட புகார்களில் அடிப்படை ஏதுமில்லை எனப் பணிவுடன் சமர்ப்பித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் 07.04.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- "திருப்போரூர் ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள் நகர் குடியிருப்பு நலவாழ்வு சங்கத்தினரால் திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சிக்கு சமர்ப்பித்த 08.03.2021 நாளிட்ட மனுவில் திருப்போரூர் கிராம புல எண். 95ல் 17.23 ஏக்கர் பரப்பளவு நிலமானது தோப்பு புறம்போக்கு எனவும், ஆனால் 1987ஆம் ஆண்டில் இந்து சமய அறநிலையத் துறையின் பெயரில் பதிவு செய்துள்ளதை இரத்து செய்திடவும், 3 ஏக்கர் பரப்பில் வசித்து வரும் 300 குடும்பங்களுக்கு பட்டா வழங்கி, மீதமுள்ள 14.23 ஏக்கர் நிலத்தை திருப்போரூர் பேரூராட்சி பெயரில் வகை மாற்றிட செய்திடவும் என தெரிவித்து மனு சமர்ப்பிக்கப்பட்டது.
- இதனை தொடர்ந்து 17.23 ஏக்கர் நிலத்தை அளவீடு செய்து, பேரூராட்சி பெயரில் பெயர் மாற்றம் செய்திட 21.06.2021ல் வட்டாட்சியரை கோரப்பட்டது.
- இதற்கிடையில் 'அ' பதிவேட்டில் இந்துசமய அறநிலைய துறையின் பெயரிலுள்ள மேற்படி 17.23 ஏக்கர் நிலத்தை திருத்தம் செய்து பேரூராட்சி பெயரில் மாற்றம் செய்திட பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம்

நிறைவேற்றப்பட்டு (தீர்மானம் எண். 10 நாள் 18.03.2022) செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கோரிக்கை அனுப்பப்பட்டது.

➢ புல எண். 95 என்பது தோப்பு புறம்போக்கு என்பதற்கோ மற்றும் பேரூராட்சியின் பராமரிப்பின் கீழ் உள்ளது என்பதற்கோ எவ்வித ஆதார ஆவணங்கள் இல்லாததால் நிலத்தின் மீது உரிமை கோர நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

➢ இந்நேர்வில் தொடர் நடவடிக்கை இல்லாததால், திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சியில் குடிநீர் திட்ட உதவியாளராக பணிபுரியும் திரு. ச. முரளி என்பவரின் மனைவி திருமதி. மு. புஷ்பலதா மற்றும் 6 நபர்கள் மேற்படி நிலத்தினை பேரூராட்சி பெயரில் வகை மாற்றம் செய்திட மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் (W.P./ No.31232023) மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் 04.03.2026 நாளிட்ட தீர்ப்புரையில் இதே கோரிக்கை குறித்து ஏற்கனவே 18 நபர்கள் செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடந்துள்ளதால், உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட நீதிப் பேராணை மனு பயனற்றதாகி விட்டதால் இவ்வழக்கினை தள்ளுபடி செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

➢ இந்நிலையில் 1877ஆம் ஆண்டு முதல் வருவாய்த் துறையின் ஆவணங்கள் அனைத்திலும் அடங்கல் உட்பட மேற்படி புல எண். 95ல் உள்ள நிலங்கள் கோவில் சொத்து என பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் நில வரியானது திருக்கோவில் மூலம் செலுத்தப்பட்டு வருகிறது. புல எண். 95ல் மொத்த பரப்பளவான 17.23 ஏக்கரில், சுமார் 3 ஏக்கர் நிலமானது குடியிருப்பாக பயன்படுத்தி வரும் நிலையில் நிலத்தை அளவீடு செய்யப்பட்டதில் 84 நபர்கள் ஆக்கிரமித்து கட்டிய குடியிருப்பு கட்டடத்தை இந்துசமய அறநிலைய துறையால் ஆக்கிரமிப்பு அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது ஆக்கிரமிப்புதாரர்களின் வேண்டுகோளின்படி வாடகைதாரர்களாக வரன்முறைபடுத்திட கோவில் நிர்வாகத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

➢ மேற்காணும் ஆக்கிரமிப்புதாரர்களில் திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சியில் குடிநீர்திட்ட உதவியாளராக பணிபுரியும் திரு. ச. முரளி என்பவரும் அடங்கியுள்ளதால், அவரது சுயலாபத்திற்காக செங்கல்பட்டு கூடுதல் சார் நீதிமன்றத்தில் தொடரப்பட்டு நிலுவையிலுள்ள வழக்குகளுக்கு (வழக்கு எண்.12/2026) தேவையான ஆவணங்களை கோப்புகளிலிருந்து நகலெடுத்து வழங்கப்பட்டுள்ளதன் மூலம் அரசு நடத்தை விதி மீறி செயல்பட்டு வருகிறார் என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு மற்றும் எதிர்மனுதாரரான திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் திரு. R.D.S. தனசேகரன் என்பவர் தனது 23.12.2025 நாளிட்ட புகார் மனுவில், செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட திருப்போரூர் கிராம புல எண். 95ல் விஸ்தீரணம் 17.23 ஏக்கர் கொண்ட நிலமானது 1877ஆம் ஆண்டின் 'அ' பதிவேட்டின்படி தோப்பு புறம்போக்கு என்ற வகைப்பாட்டில் உள்ள நிலையில் இந்நிலத்தை இந்து சமய அறநிலையத் துறை பெயரில் தவறுதலாக பட்டா வழங்கியுள்ளது என தெரிவித்து, இந்நிலத்தை மீட்பதற்கு பேரூராட்சி செயல் அலுவலரால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என புகார் தெரிவித்திருப்பது அறிய முடிகிறது.

இதற்கிடையில் மனுதாரர் திரு. R.D.S. தனசேகரன் என்பவரிடமிருந்து நாளிடப்படாத கடிதம் இம்முறைமன்ற நடுவத்தில் 02.04.2026 அன்று பெறப்பட்டு அதில் தான் பிறர் தூண்டுதலின்பேரில் இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனுவை சமர்ப்பித்ததால், அதனை தற்போது திரும்ப பெறுவதாக தெரிவித்திருப்பதும் அறிய முடிகிறது.

1877ஆம் ஆண்டு முதல் வருவாய்த் துறையின் ஆவணங்கள் அனைத்திலும் அடங்கல் உட்பட மேற்படி திருப்போரூர் கிராம புல எண். 95ல் உள்ள நிலங்கள் கோவில் சொத்து என பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் மேலும் நில வரியானது திருக்கோவில் மூலம் செலுத்தப்பட்டு வருகிறது எனவும் புல எண். 95ல் மொத்த பரப்பளவான 17.23 ஏக்கரில், சுமார் 3 ஏக்கர் நிலமானது குடியிருப்பாக பயன்படுத்தி வரும் நிலையில் நிலத்தை அளவீடு செய்யப்பட்டதில் 84 நபர்கள் ஆக்கிரமித்து கட்டிய குடியிருப்பு கட்டடத்தை இந்துசமய அறநிலைய துறையால் ஆக்கிரமிப்பு அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது ஆக்கிரமிப்புதாரர்களின் வேண்டுகோளின்படி வாடகைதாரர்களாக வரன்முறைபடுத்திட கோவில் நிர்வாகத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்திருப்பதை அவரது வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

மேலும் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் திருப்போரூர் கிராம புல எண். 95ல் உள்ள நிலமானது கோவிலுக்கு சொந்தமான சொத்து அல்ல என திரு. M. இளங்கோவன் என்பவரால் மாண்பமை செங்கல்பட்டு கூடுதல் சார் நீதிமன்றத்தில் வழக்கு (O.S. No. 12 of 2026) தொடரப்பட்டு அவ்வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்பதையும் செயல் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் மாண்பமை செங்கல்பட்டு கூடுதல் சார் நீதிமன்ற இணையதளம் வாயிலாக தெரிய வருகிறது.

மேற்காணும் சூழ்நிலையில் 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b)-ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது கருத்தில் கொள்ளப்பட்டது.

<u>Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014</u>

Sec. 10(3) The Ombudsman shall not enquire into matters relating to;-

(a) xxxxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;

இந்நிலையில் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் திருப்போரூர் கிராம புல எண். 95ல் அமைந்துள்ள நிலம் தொடர்பாக திரு. M. இளங்கோவன் என்பவரால் மாண்பமை செங்கல்பட்டு கூடுதல் சார் நீதிமன்றத்தில் வழக்கு (OS No. 12 of 2026 ) தொடரப்பட்டு அவ்வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாக திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில் 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3) (b)-ன்படி மனுதாரரின் 23.12.2025 நாளிட்ட புகார் மனுவினை இம்முறைமன்றம் விசாரிக்க இயலாது என்பதால் இப்புகார் மனு தொடர்பான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு மே திங்கள் 13 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவம்

பெறுநர்
1. திரு. R.D.S. தனசேகரன்,
எண். 25, சிதம்பர சுவாமிகள் 1வது தெரு,
பாலாஜி நகர் அருகில்,
திருப்போரூர், செங்கல்பட்டு மாவட்டம் - 603 110.
2. செயல் அலுவலர்,
திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி,
செங்கல்பட்டு மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–28.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

19/5/26
செயலாளர்
19/5/26.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032